

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்தரம், தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் தேரோட்ட விழாவில் கலந்து கொண்டு, வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தினை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, த.மனோ தங்கராஜ் ஆகியோர் நேற்று (02.01.2026) தொடங்கி வைத்தனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் என். சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் திருமதி பி.கவிதா பிரியதர்சினி, திருமதி ஏ. ஜான்சிராணி, உதவி ஆணையர் திருமதி கே.தங்கம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் தேரோட்டம்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – த.மனோ தங்கராஜ் பங்கேற்பு!

கன்னியாகுமரி, ஜன.3-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் நேற்று (02.01.2026) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் தேரோட்ட விழாவில் கலந்து கொண்டு, வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தினை தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து திருக்கோயிலுக்கு மீண்டும் குடமுழுக்கு நடத்திடும் வகையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தாணுமாலயன் சுவாமி திருக்கோயிலானது 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் மார்கழி திருவிழா டிசம்பர் 25 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக நேற்று விநாயகர், சுவாமி, அம்மன் திருத்தேர்களின் தேரோட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு மற்றும் த.மனோ தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேரோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

எல்லா வளமும் நலமும் தருகின்ற சுசீந்திரம்தாணுமலையான் சுவாமி திருக்கோயிலில் மார்கழி மாத தேரோட்டத்தை இன்றைக்கு நானும், இந்த மாவட்டத்தின் அமைச்சர் மனோதங்கராஜ் அவர்களும், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் அவர்களும் பொதுமக்களோடு இணைந்து தொடங்கி வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்த அளவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சுமார் 300 திருக்கோயில்கள் திருப்பணிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, இது வரையில் 127 திருக்கோயில்கள் குடமுழுக்கு காணப்பட்டிருக்கின்றது. இந்த மாவட்டத்தில் 400 ஆண்டுகளுக்க பிறகு திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில், மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோயில், திருவிதாங்கோடு மகாதேவர் திருக்கோயில் போன்றவை இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு காணப்பட்டது. இப்படி வரலாற்று சிறப்புமிக்க கன்னியாகுமரியில் அமைந்திருக்கின்ற திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு கண்ட ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 திருக்கோயில்களுக்குகு சொந்தமான 20 திருத்தேர்களுக்கு 1.85 கோடி ரூபாய் செலவில் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள் அமைத்து தரப்பட்டுள்ளது. அதே போல் 6 திருக்கோயில்களுக்கு சொந்தமான 8 திருக்குளங்கள் 2.19 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. தாணுமாலயன் திருக்கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் 34.50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டதில் எதிர்பாராதவிதமாக தடுப்பு சரிவு ஏற்பட்டதால் அந்தப் பணிகளுக்கு மறுமதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையர் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓரிரு நாளில் ஆணையர் அனுமதி வழங்கப்பட்டு இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணியினை தொடங்குவோம்.

பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த நண்பர்கள் ஏப்ரல் மாதம் நடைபெறுகின்ற திருவிழாவிற்குள் திருக்குளத்தை செப்பனிட்டு தெப்பத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்தார்கள். போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு இணை ஆணையாளருக்கு தற்போது உத்தர விட்டிருக்கின்றோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நிதிக்காக 3 கோடி ரூபாய் தான் அரசு மானியமாக வழங்கப்பட்டது. திருக்கோயில்களின் பணியாளர்கள் ஊதியம், திருக்கோயில்களில் நடைபெறுகின்ற உற்சவங்கள், திருவிழா கால செலவினங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று படிப்படியாக உயர்த்தி தற்போது ஆண்டிற்கு 18 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கி வருகின்றோம்.

அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இது வரையில் 51 கோடி ரூபாய் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் வரும் 490 திருக்கோயில்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், அவற்றையும் கண்டறிந்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அரசு மானியத்தை பெற்று பக்தர்களின் வசதிக்குண்டான அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம். இந்த திருக்கோயிலில் 2.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இறை அன்பர்களின் வசதிக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை செய்து வருகிறது. பொற்கால ஆட்சியின் இந்த இறைப்பணிகள் தொடரும். இறைவனிடம் வழிபடுகின்ற நேரத்தில் பிரிவினைகள் வேண்டாம். இறைவழிபாட்டிலே தகாத கோஷங்கள் எழுப்ப வேண்டாம். இறைவழிபாட்டை அமைதியான முறையில் கடைபிடியுங்கள் என்ற வேண்டுகோளை தேவையற்ற கோஷங்களை எழுப்பும் நண்பர்களுக்கு துறை சார்ந்த அமைச்சர் என்ற முறையில் பணிவுடன் முன் வைக்கின்றேன்.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு மாநில வல்லுநர் குழு, தொல்லியல் குழுவின் அனுமதி பெற்ற பிறகு பணிகளை தொடங்க வேண்டும். ஒவ்வொரு திருக்கோயிலும் குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறை வடைவதற்குள்ளாக குடமுழுக்கு நடத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆட்சியில் தான் 3,956 திருக்கோயில்களுக்கு இன்று வரை குடமுழுக்கு நடந்திருக்கின்றது. 4000-வது குடமுழுக்காக பிப்ரவரி 8 அன்று சென்னை, வியாசர்பாடி இரவீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளது. சாலை மட்டத்திலிருந்து தாழ்வாக உள்ள 25 திருக்கோயில்கள் லிப்டிங் முறையில உயர்த்தப்பட்டு வருகின்றது.

கன்னியாகுமரிக்கு வருகின்றபோதெல்லாம் இரணியல் அரண்மனையை பார்வையிட்டு சென்று இருக்கின்றேன். அந்த அரண்மையை பொறுத்தளவில் பழமை மாறாமல் கட்டப்பட வேண்டிய சூழல் இருக்கின்றது. ஏதோ எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இல்லாமல் முதலிலேயே 3 கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் பழமை மாறாமல் கட்டுகின்ற பணிகள் என்பதால் தற்போது 8 கோடி ரூபாயை நெருங்கி இருக்கின்றது. எவ்வளவு விரைவாக அதனை முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களை போலவே எனக்கும் இருக்கின்றது. ஆகவே அந்த பணிகளை விரைந்து முடிப்பதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

கன்னியாகுமரி, பகவதி அம்மன் திருக்கோயிலை பொறுத்தளவில் பெருந்திட்ட வளாக பணிகளின் (மாஸ்டர் பிளான்) கீழ், 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் மற்றும் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் என். சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர்கள் திருமதி பி.கவிதா பிரியதர்சினி, திருமதி ஏ.ஜான்சிராணி, உதவி ஆணையர் திருமதி கே.தங்கம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதி திருவள்ளூர் ஒன்றியம் கீழானூர் பகுதியில் ரூ.30 கோடி மதிப்பில் 110 கிலோ வோல்டு துணைமின் நிலைய கட்டுமானப் பணியை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் டி..முரளிகிருஷ்ணன், மேற்பார்வை பொறியாளர்கள் அ.சேகர், ஜெயந்தி, ஒன்றிய நிர்வாகிகள் எம்.பர்கத்துல்லாகான், டி.தென்னவன், எம்.மனோகரன், மதுரைவீரன், விமலாகுமார், பிராங்ளின், கபிலன், கருணாகரன், நாகராஜ், டி.சஞ்சய் அஜித்குமார், வேலு, பலராமன், ராமானுஜம், பாபு, புருஷோத்தமன்,, சதீஷ்குமார், ரூபன், துளசி, பாஸ்கர், கோதண்டன், ரவிந்தர் பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (எஸ்ஐஆர்) பட்டியல் சரிபார்த்தல்

# 2026 ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம் குறித்து மாவட்ட, மாநகரச் செயலாளர்/பொறுப்பாளர் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்கு...

## தலைமைக் கழக அறிவிப்பு!

1-1-2026 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) முடிந்து இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை 12.12.2025 அன்று வெளியிட்டு, "தகுதியுள்ள வாக்காளர்கள் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் டிசம்பர் 27, 28, மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்." என தேர்தல் ஆணையம் அறிவித்ததைத் தொடர்ந்து,

வருகிற 2026 ஜனவரி 3.(சனி) 4 (ஞாயிறு) ஆகிய நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2026 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2026ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு/வட்டக் கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) - வாக்குச்சாவடி நிலைய குழு உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு, தொகுதி பார்வையாளர்கள் வருகிற ஜனவரி 3, 4 ஆகிய இரு நாட்களும் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள வாக்குச் சாவடிகள் தோறும் நேரிடையாகச் சென்று ஆய்வு செய்து, வாக்காளர் சேர்த்தல் - நீக்கல் - திருத்தல் ஆகிய பணிகளை அந்தந்த வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) மற்றும் வாக்குச் சாவடி உறுப்பினர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றுகிறார்கள் என்பதை ஆய்வு செய்திட வேண்டுமெனவும்,

'ஒவ்வொரு தொகுதி பார்வையாளர்களும், தேர்தல் ஆணையத்தால் 2025 டிசம்பர் 27,28, 2026 ஜனவரி 3,4 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட முகாம்களையும் சேர்த்து, இதுவரை தத்தமது தொகுதியில் சேர்த்தல் - நீக்கல் - திருத்தம் செய்த வாக்காளர்களின் எண்ணிக்கை விவரங்களையும், **குறிப்பாக ஓரணியில் தமிழ்நாடு' பட்டியலில் உள்ளோர், பாகம் வாரியாக நீக்கப்பட்டோர் எத்தனை பேர்? அவர்களில் புதியதாக படிவம்-6 கொடுத்து சேர்க்கப்பட்டோர் எத்தனை பேர்? சேர்க்க இயலாதவர்கள் எத்தனை பேர்? அதற்கான காரணம் என்ன? ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேர்? ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் வருகிற 2026 ஜனவரி 6ஆம் தேதிக்குள் தலைமைக் கழகத்திற்குள் அனுப்பி வைத்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.01.2026

**தலைமைக் கழகம்
தி.மு.க.**

டி.பழனிவேல் - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. - என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. - ரெ.தங்கம் பங்கேற்பு!

# தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி - தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் பொங்கல் விழா! நல உதவிகள்!

## நிகழ்ச்சி ஏற்பாடு: சங்க மாவட்ட தலைவர் என், ஜெயபாலமுருகன், வீர.சரவணன்,ஆர். சின்னமணி!

தஞ்சை, ஜன. 3 -

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி - மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் இன்று (03.01.2026 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை குட்டால் கல்யாண மண்டத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாவட்டத் தலைவர் என். ஜெயபாலமுருகன், மாநில சங்க செய்திதொடர்பாளர் வீர. சரவணன், மாவட்ட சங்க செயலாளர் ஆர். சின்னமணி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் டி.பழனிவேல் தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ., பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என். அசோக்குமார் எம்எல்ஏ, தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணியின் மாநில தலைவரும்,

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இவ்விழாற்கு நகரக் கழகச் செயலாளர் எஸ்ஆர் என்.செந்தில்குமார் முன்னிலை பொறுப்பு வகுக்கிறார்.

பட்டுக்கோட்டை நகர் மன்ற தலைவர் சண்முகப் பிரியா செந்தில்குமார், மற்றும் தஞ்சை தெற்கு மாவட்ட அனைத்து அனைத்து ஒன்றிய கழக செயலாளர்களான என்பி. பார்த்திபன், பா. ராமநாதன், குல.செ. அருள் நம்பி, ஆர்.பன்னீர்செல்வம், ஒன்றிய பொருளாளர் டி மெய்யநாதன், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் இணைப்பு பொதுச் செயலாளர் திருக்குவளை என் அம்பாள் குமார், மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் சொ. விஜயகுமார், மாணவரணி அமைப்பாளர் ஆசத். மகேந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

சங்க மாவட்ட பொருளாளர் கேவி. கோட்டைதுரை, சங்க ஒன்றிய தலைவர் டி.கோபி செல்வம், எம். பாலசுப்பிரமணியன், எஸ்.ஆர் திருமேனி, செந்தில்குமார், ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார். இவ்விழாவில் கழகத் தொண்டர்களும், ஏராளமான மாற்றுத்திறனாளிகளும், சமூக ஆர்வலர்களும் பங்கேற்கின்றனர்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகளான புஷ்பலதா, வி.மாரிமுத்து, எஸ். சுரேஷ், வி. சபீர்கான், கே.வேலுச்சாமி ஆகியோர் விழா நிறைவில் நன்றியுரையாற்றுகின்றனர்.